ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

23.01.2025

1. ஞானமோடு தானபலம் அடையவே
நம்பிக்கையூட்டி அரங்கன் யானும்
ஞானக்குடில் படைத்து இனிதே
நாள்தோறும் அன்னதான சேவை

2. சேவை துவக்கி அருளமுதாகவே
சென்றடைய அருளி வருகவே
அவணியோர் பிரணவக் குடிலுக்கு வர
ஆன்மபலம் அடைவீர் என்று கூறி

3. கூறியே குரோதி கலை திங்கள்
குறைவிலா இரண்டாம் குருவார அருளாசி
தெரிவிப்பேன் அரங்கமகானும் மக்களுக்கு
தேடியே குருவருளாக அருளிவர

4. வருமுலகில் சோதி வழிபாட்டுடன்
வளரும் அன்னதான சேவையும்
பெருநகரம் கிராமம் கிராமமாக
பேதமற அரங்கன் என் நாமம் வழி

5. வழிதனில் அளவற்ற தருமசாலை
வல்லமைமிக்க கிளைகளாகவே
தெளிவுதரும் வண்ணம் பெருகி
தேசிகன் என் அனுகூலம் கூடிட

6. கூடிடவே உலகோர் பசிபிணியை
குறிப்பாக அகற்றி பாதுகாப்பு
தேடித்தரும் வண்ணம் சக்தியாக
தொண்டர் படைகள் பெருகவே

7. பெருகவே உலகினில் மாற்றம்
பேராசானாக யானே வழிநடத்த
முருகப்பெருமான் வழிபாடாக
முழுமை தரும்படி பூசை முறைகளும்

8. முறையாக சைவநெறி கண்டிட
மூவுலகும் வியக்க மாற்றம்
மறை போற்றவே கண்டடையும்
மகான் என் அவதார நோக்கம்

9. நோக்கம் பூர்த்தி ஆகும்படி
நல்லுலகம் ஞான உலகமாகும்
ஆக்கமுடன் அன்னதனால் மக்களே
அரங்கமகான் என் அழைப்பாக

10. அழைப்பாகவே ஏற்று துறையூர்
அரங்கனென் பிரணவக்குடிலுக்கு
பழக்கமாக்கி தொடர் வருகைதனை
புரிந்துமே சோதியுள் எனை கண்டு

11. கண்டு வணங்கி தருமத்தில் உதவி
காப்பாய் கடைத்தேற்றுவாய் என
தொண்டனாகி வேண்டி நிற்க
தேசிகன் யான் அக்கணமே மீட்டு அருள் செய்வேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி